சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) இலங்கையில் காணப்படும் அரச நிறுவனம் எது?

01) பிரதேச செயலகம் 02). சம்பத் வங்கி 03). வீடு

2) பொருள் ஒன்றை வாங்கும்போது அதிக கவனம் செலுத்த வேண்டிய விடயம் எது?
1) பொருள் வாங்கும் கடை 2) பொருளின் நிறம் 3) காலாவதித் திகதி

3) பொதுப்போக்குவரத்து சாதனங்களால் ஏற்படும் நன்மை யாது?

1) அதிக செலவு (2) நேரம் அதிகம் தேவை (3) குறைந்த செலவு ஏற்படும்

4) மலைப்பகுதிகளில் மண்ணை வெட்டி அப்புறப்படுத்துவதால் ஏற்படும் அனர்த்தம்
1. மண்சரிவு 2 நிலநடுக்கம் . 3.சுனாமி

5) பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் அல்லாதது
1. பாதையில் வலது புறத்தின் வழியே நடந்துசெல்லல்
2)பட்டாசு கொழுத்துதல்
3) புகையிரதத் தண்டவாளத்தின் வழியே நடந்துசெல்லல்

6) இனிப்பான உணவுகள், மாப்பொருள் உணவுகள் அதிகம் உண்ணுதல் ஏற்படும் நோய்?
1)நீரிழிவு 2) குருதியமுக்கம் 3) இரப்பையழற்சி

7) நீராவி மூலம் பெறத்தக்க பயன்களில் ஒன்று
1) நீர் கட்டியாக்க 2) பிட்டுஅவிக்க 3) நீர் குளிர்விக்க

8) சிவப்பு + நீலம் ஆகிய நிறங்கைக்கலப்பதால் பெறப்படும் நிறம் யாது?
1) ஊதா 2) செம்மஞ்சள் 3)கபிலம்

9) அசுத்தமான நீரைப்பருகுவதால் ஏற்படும் நோய்கள் எவை?
1) வயிற்றோட்டம் 2) டெங்கு 3) தடிமன்

10) பேருந்தில் ஆசனம் ஒதுக்கப்படாதவர்கள் ?
1) மதகுருமார் (2) மாணவர்கள் (3) கர்ப்பிணித் தாய்மார்

11) கொதித்தாறிய நீருக்குள் தேங்காயெண்ணெய் கலந்த பாத்திரத்தில் வித்தை வைத்து அவதானித்த போது 03 நாட்களின் பின்
1. முளைத்திருந்தது 2. முளைக்கவில்லை 3.அதிகமாக முளைத்திருந்தது

12) நாற்றுமேடையில் நட்டு பயிர் பெறும் தாவரம் எது?
1. பயற்றை 2. வெண்டி 3. மிளகாய்

13) ‘‘வானத்தில் இருந்து விழும் ஒவ்வொரு மழைத்துளியையும் வீணாக்காது பயன்பெற வேண்டும்” எனக்கூறிய மன்னன் யார்? 1) மகாசேனன் 2)பராக்கிரமபாகு
3) தாதுசேனன்

14) பின்வருவனவற்றுள் புகையிரதப் பாதையைக் குறிக்கும் நிறம் எது?
1)மஞ்சள் (2) பச்சை (3) நீலம் (4) கறுப்பு

15) பதிவுத்தபால் தபால் கட்டணம் எவ்வளவு?
1) ரூபாய் 20.00 2) ரூபாய் 50.00 3) ரூபாய் 110.00

16) தொடர்பாடலில் கூறுகள் அல்லாதது
1)தொலைபேசி 2)ஊடகம் 3)பெறுநர்

17) மின்னேரியாத் தெய்வம் என அழைக்கப்பட்ட மன்னன் யார்?

1) தாதுசேனன் 2.மகாசேனன் 3.பராக்கிரமபாகு

18) இலங்கையில் கலைப்படைப்புள்ள ஓவியம் உள்ள இடம் எது?
1.. அஜந்தா ஓவியம் 2) பொலன்னறுவை 3) சிகிரியா ஓவியம்.

19) சீகிரியா குன்று காணப்படும் மாவட்டம் எது?
1) அனுராதபுரம் 2. திருகோணமலை 3. மாத்தளை

20) இலங்கைத் திருநாடு உலகுக்கு அளித்த தத்துவஞானி யார்?
1) ஆதர்.சி.கிளார்க் 2) கலாநிதி.ஆனந்தகுமார சுவாமி 3) வண.எஸ்.மகிந்த

(20 x2 = 40 புள்ளிகள்)

2)சரியான விடையை இனங்கண்டு தொடர்பு படுத்துக

1. சிகிரியா	மொனராகலை
2. பெருக்க மரம்	கண்டி
3. ஓபநாயக்க பெருங்கொடி	மாத்தளை
4. கப்ரன் டோசன் கோபுரம்	மன்னார்
5. கபலித்த புளிய மரம்	இரத்தின புரி

(5 x2 = 10 புள்ளிகள்)

03) சரியாயின் சரி (சரி) எனவும் பிழையாயின் பிழை (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக.

1) பண்டைய காலத்தில் தகவல் தொலைபேசியால் பரிமாறப்பட்டது ( )

2) திறந்த தபால் அனுப்ப கடித உறை தேவையாகும் ( )

3) இரவு பகல் ஏற்படுவது பூமியை சூரியன் சுற்றுவதால் ஆகும் ( )

4) **இலங்கையில் உள்ள 09 மாவட்டங்கள் உள்ளன** **( )**

5) சனத்தொகை கூடிய மாவட்டம் கொழும்பாகும் ( )

6) திவயின ஒரு தமிழ் பத்தரிகையாகும் ( )

7) இலங்கையில் உள்ள 25 மாகாணங்கள் உள்ளன **( )**

8) சூரியனுக்கு அண்மையிலுள்ள கோள் புதன் ஆகும் **( )**

9) தபாலட்டையின் பெறுமதி ரூபா 20.00 ஆகும் ( )

10) வெளிநாட்டுத்தபாலை இடவேண்டிய தபாற்பெட்டியின் நிறம் நீலம் ஆகும் ( )

(10 x1 = 10 புள்ளிகள்)

04)பொருத்தமான விடையைத் தெரிவு செய்து விடை எழுதுக.

தொலைக்காட்சி, ரூபாய் 50.00, ஸ்ரீபாத, ,குதிரைவீரன், ஊடகம், வயர்லெஸ் வேர்ல்ட், காற்றுத்திசைகாட்டி, வியாழன், கவரும் , தள்ளும்

1) கட்புல செவிப்புல ஊடகங்களில் ..... ஒன்றாகும்.

2) சாதாரண தபால் கட்டணம் .....ஆகும்

3) பண்டைய காலத்தில் தகவல் பரிமாற .....பயன்படுத்தப்பட்டான்.

4) அனுப்புனரையும் பெறுநரையும் இணைப்பது..... ஆகும்.

5) ஆதர் சி.கிளாக் எழுதிய .....கட்டுரை மூலமே அவர் பிரபல்யமடைந்தார்.

6) ..... என்ற நூல் வண.எஸ் மகிந்த தேரரால் எழுதப்பட்ட இறுதி நூலாகும்

7) காற்று வீசும் திசையை அறிய உதவுவது.....ஆகும்.

8) குாந்தத்தின் ஒத்த முனைகள் ஒன்றை ஒன்று.....

9) காந்தத்தின் ஒவ்வாத முனைகள் ஒன்றை ஒன்று.....

10) சூரிய குடும்பத்தில் மிகப் பெரிய கோள் .....ஆகும்

(10 x2 = 20 புள்ளிகள்)

2) சுருக்கமான விடை தருக

1. ஈருடக வாழிக் பிராணிகள் 02 தருக?

.....

.....

2. பொருட்களை வாங்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 01 தருக?

.....

3. கழிச்சல் நோய் ஏற்படக்காரணமான பிராணி யாது?

.....

4. சேதனப்பசளைகள் 02 தருக

.....

5. பாதசாரிக்கடவையைக் கடக்கும்போது பின்பற்ற வேண்டிய விடயம் 01 தருக?

.....

6. சீதபேதி நோய் ஏற்படக்காரணம் யாது?

.....

7. யாழ்கோட்டை அமைந்துள்ள மாகாணம் எது?

.....

8. இரணைமடுக்குளம் அமைந்துள்ள மாவட்டம் எது?

....

9. மக்கள் மாட்டிறைச்சி உண்பதை தவிர்ப்பதற்காக அரும்பாடுபட்டவர் யார்?

.....

10. பல்லாங்குழி விளையாட்டிற்கு பயன்படுத்தப்படும் பலகையில் காணப்படும் குழிகள் எத்தனை?

.....

(10 x2 = 20 புள்ளிகள்)